වාර්ෂික වාර්තාව

ஆண்டறிக்கை

ANNUAL REPORT 2022

ඉඩම් මැනුම් සභාව

நில அளவைச் சபை

Land Survey Council

ඉඩම් මැනුම් සභාව, සර්වේයර් ජනරාල් කාර්යාලය,අංක150, කොළඹ 05.
Epy msitr; rig> epy msitahsH mjpgjp mYtyfk;>,y.150 ngர்னாட்nfhOk;G 05.
Land Survey Council, Surveyor General's Office, No. 150, Colombo 05.

உள்ளடக்கம்

1.	தலைவர் அவர்களின் செய்தி	02
2.	தொலைநோக்கு மற்றும் செயற்பணி	04
3.	நில அளவைகள் சபை	05
4.	நில அளவைகள் சபையின் பணிகள்	06
5.	நில அளவைகள் சபைக்கு உரித்தான அதிகாரங்கள்	07
6.	நில அளவைகள் சபையின் செயலாற்றுகை அறிக்கை	08
7.	நில அளவைகள் சபையின் அலுவலர் குழாம்	09
8.	நில அளவைகள் சபையின் செயற்பாடுகள்	10
9.	கற்கை மற்றும் பயிற்சி நடவடிக்கைகள்	16
10.	நிதி முகாமைத்துவம்	19
11.	2022 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குக் கூற்றுக்கள்	23
	I. நிதி நிலைமை தொடர்பான கூற்று	
	II. நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்று	
	III. காசுப் பாய்ச்சல் கூற்று	
	IV. உரிமை மாற்றமடைதல் தொடர்பான கூற்று	
	V. 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான குறிப்பு	
	VI. 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்	
12	கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை 2022	33

01. தலைவர் அவர்களின் செய்தி

நில அளவைகள் சபை
நில அளவையாளர் நாயக அலுவலகம்
இல.150,
கொழும்பு 05.
20-03-2023

விஷேடமாக 2022 ஆம் ஆண்டு பூராகவும் நாட்டில் அவ்வப்போது ஏற்பட்ட பல்வேறு குழப்ப நிலைமைகள் மற்றும் சவால்களின் மத்தியில் தரமான மற்றும் வினைத்திறனான வகையில் தொழிற்துறையில் சிறந்த தரத்திலான நில அளவைச் சேவை ஒன்றினை வழங்கும் நோக்கில் நில அளவைத் தொழிற்துறையினரை வலுவூட்டுவதன் ஊடாக பொதுமக்களின் பல்வேறு வகையான நில அளவைத் தேவைப்பாடுகளை பயனுறுதி உள்ள வகையில் பூர்த்தி செய்வதற்காக பாரிய பங்களிப்பு ஒன்றினை வழங்குவதற்கு நில அளவைகள் சபைக்கு ஆற்றல் கிடைத்தமை தொடர்பில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

2002 ,17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் ஊடாக, நில அளவைகள் சபையிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள பணிகள் மற்றும் அதிகாரங்கள் என்பவற்றினை நடைமுறைப்படுத்தும்போது பிரதானமாக நில அளவையாளர்களைப் பதிவு செய்தல்,பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்களுக்கு வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், தொழில் சார் நில அளவையாளர்களுக்கு தொடர்ச்சியான தொழில் சார் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் அவ்வாறே பதிவு செய்யப்பட்டுள்ள நில அளவையாளர்களின் தொழில் ரீதியான ஒழுக்கக் கட்டுப்பாடு என்பன நில அளவைகள் சபையின் பொறுப்புக்கள் ஆகும். அது மட்டுமன்றி, பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்களுக்கு எதிராக பொதுமக்கள் முன் வைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல், பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்களின் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குதல்,ஏனைய தொழில்சார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ளல் என்பனவும் நில அளவைகள் சபையின் பொறுப்புக்களுக்கு உரித்தானவை ஆகும்.

நில அளவைகள் சபை தாபிக்கப்பட்டு தற்போதாகும் போது இரண்டு தசாப்தங்களுக்கும் மேற்பட்ட காலம் ஒன்று சென்றிருந்த போதிலும் இது வரை அதன் பாரிய ஒரு குறைபாடாகக் காணப்பட்ட நில அளவைகள் விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு நில அளவைகள் சபையில் பதிவினைப் பெற்றுக் கொள்வதற்காக உரிய வழிமுறை ஒன்று இல்லாமை தொடர்பில் சபையின் சகல உறுப்பினர்களினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் வலுவான ஒழுங்குவிதிகள் கோவை ஒன்றினை வரைந்து அங்கீகரித்துக் கொள்வதற்கு இயலுமாகியமை இந்த வருடத்திற்குள் கிடைக்கப் பெற்ற பாரிய ஒரு வெற்றி ஆகும் என்பதனை பணிவுடன் குறிப்பிடுகின்றேன். கல்வித் தகைமைகளைப் பெற்றுக் கொண்டுள்ள நில அளவையியல் விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு நில அளவைகள் சபையின் பதிவினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய வழிகாட்டல் ஒன்றினையும் மற்றும் உரிய வேலைத் திட்டம் ஒன்றினையும் தயாரித்தல் இந்த ஒழுங்குவிதிகளின் அடிப்படை நோக்கம் ஆகக் காணப்பட்டது. தற்போதாகும் போது சட்ட வரைஞரிடம் முன்வைக்கப்பட்டு உள்ள இந்த ஒழுங்குவிதிகளில் முன்வைக்கப்படும் விடயங்களுக்கு அமைய உரிய திருத்தம் / விருத்தி செய்து வர்த்தமானியின் ஊடாக வெளியிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் தொழில் சார் அபிவிருத்தி அவ்வாறே தொழில் சார் ஒழுக்கம் என்பவற்றினைப் பேணி வருவதற்காக 2022 ஆம் ஆண்டிலும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திப் பயிற்சிப் பாடநெறிகள் சிலவற்றை அனுமதித்து நடாத்துவதற்கு நில அளவைகள் சபையினால் விஷேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. அதன் போது பாடநெறிகளில் பங்குபற்றுவதற்காக பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் காட்டிய ஆர்வம் விஷேடமாகத் தென்பட்டது.

மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் நில அளவைகள் சபையினை சிறந்த முறையில் பேணி வருவதற்காக பதிற் கடமைச் செயலாளர், கணக்காளர் (பகுதி நேர) உட்பட மொத்த அலுவலர் குழாத்தினரும் அவ்வாறே நில அளவைகள் சபையின் சகல உறுப்பினர்களிடம் இருந்தும் கிடைக்கப் பெற்ற ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எஸ். சிவானந்தராஜா
தலைவர்

02. தொலை நோக்கு மற்றும் செயற்பணி

தொலை நோக்கு

நில அளவைகளுக்காக முறையான ஒரு சட்டகத்தினை தொடர்ச்சியாகப் பேணி வருவதன் ஊடாக தேசிய அபிவிருத்திக்காக எமது பௌதீக மற்றும் இயற்கை வளங்களின் சிறந்த மற்றும் நிலையான பயன்பாட்டினை உறுதிப்படுத்தி அதனூடாக போட்டித் தன்மையான உலகளாவிய சந்தையில் சிறந்த தரத்திலான மற்றும் தொழிற் தேர்ச்சியுடைய நில அளவைச் சேவைகளை வழங்கும் நோக்கில் தொழில் சார் சூழலினை வலுப்படுத்தல் எமது நில அளவைகள் சபையின் தொலை நோக்காகும்.

செயற்பணி

நில அளவைகள் தொழில் சார் மற்றும் அதன் நடவடிக்கைகளை முறையாகப் பேணி வருவதாகவும், தொழிற்துறையின் ஊடாக எதிர்பார்க்கும் தொழிநுட்ப நியதிகள் மற்றும் சட்ட பூர்வமான தரங்களுக்கு இணங்கி ஒழுகும் வகையில் பயிற்சி ஒன்றினையும் மற்றும் கல்வி ஒன்றினையும் தொழிற்துறையில் பிரவேசிப்பவர்களுக்கு கிடைப்பதாகவும் அதன் மூலம், தொழிலில் ஈடுபவர்களினால் தொழிற்துறையின் பேணல் உயர் தரத்தில் பேணப்பட்டு வருவதாகவும் உறுதிப்படுத்தல் நில அளவைகள் சபையின் செயற்பணி ஆகும்.

03. நில அளவைகள் சபை

2002, 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் 26 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய கொழும்பு 05, கிருல வீதி, இலக்கம் 150 எனும் முகவரியில் அமைந்து உள்ள நில அளவையாளர் நாயக அலுவலகக் கட்டிடத்தின் நிலக்கீழ் மாடியில் 2003 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் நில அளவைகள் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

நில அளவைகள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நில அளவைகள் சபையின் கூட்டிணைப்பு எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது தொடர்பாக ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டு உள்ளன. மேற்படி ஏற்பாடுகளுக்கு அமைய நில அளவைகள் சபையானது 7 உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் மேற்படி உறுப்பினர்களை நியமிக்கும் முறை கீழ் வருமாறு விபரிக்கப்படுகின்றது.

(அ) உத்தியோகபூர்வ ரீதியாக நியமனம் பெறும் உறுப்பினர்கள்

i. தலைவர் - நில அளவையாளர் நாயகம் அவர்கள்

ii. உப தலைவர் - நில அளவையாளர் நாயகம் அவர்களினால் பெயர் குறிக்கப்படும் பிரதி நில அளவையாளர் நாயகம் அவர்களுக்கு குறையாத பதவி ஒன்றினை வகிக்கும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர் ஒருவர்

iii. உறுப்பினர்கள் - 1969 ,21 ஆம் இலக்க நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவன சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டு உள்ள நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தின் பணிப்பாளர் அவர்கள்

(ஆ) நியமிக்கப்படும் உறுப்பினர்கள்

i. உறுப்பினர்கள் `- 1982 , 22 ஆம் இலக்க இலங்கை நில அளவையாளர்கள் நிறுவன (கூட்டிணைக்கும்) சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை நில அளவையாளர்கள் நிறுவனத்தினால் பெயரிடப்படும் நில அளவைகள் தொடர்பான பாரிய அனுபவங்கள் மற்றும் தெளிவான ஆற்றல்கள் என்பவற்றினைக் கொண்ட நில அளவையாளர்கள் மூன்று பேர்

ii. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறிப்பிடப்படும், பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வியியல், நிருவாகம், முகாமைத்துவம் அல்லது பொறியியல் விஞ்ஞானம் ஆகிய ஒரு துறை சார் அறிஞர் ஒருவர்.

மேற்படி நியமனங்கள் அமைச்சர் அவர்களினால் மேற்கொள்ளப்படும்.

04. நில அளவைகள் சபையின் பணிகள்

நில அளவைகள் சபையின் பணிகள் நில அளவைகள் சட்டத்தின் 37 ஆவது பிரிவின் கீழ் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டு உள்ளன.

(அ) நில அளவைக்குரிய தரங்கள் மற்றும் செயலாற்றுகை நடைமுறை என்பவற்றினை பேணி வருதல் மற்றும் நில அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கும் நபர்களுக்கு இடையில் தொழில் ரீதியான ஒழுக்க நெறிமுறைகளைப் பேணி வருதல்.

(ஆ) பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்களாக பதிவு செய்வதற்காக நில அளவையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் மேற்படி நில அளவையாளர்களுக்கு நில அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதற்காக உரிய தகைமைகள் மற்றும் அனுபவம் மற்றும் ஆற்றல் மற்றும் தேர்ச்சி என்பன உள்ளது என சபை திருப்தியுரும் சந்தர்ப்பங்களில் அவர்களைப் பதிவு செய்தல்.

(இ) தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் நில அளவைகள் தொழிற்துறையில் ஈடுபடுவதற்காக மேற்படி நில அளவையாளர்களுக்கு அறிவும் மற்றும் திறமையும் உள்ளது என சபை திருப்திப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

(ஈ) நில அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ள நபர்களுக்கு இடையில் தொழில்சார் கல்வி தொடர்பான உயர் தரத்தினை பேணி வருதலினை ஊக்குவித்தல்.

(உ) நில அளவையாளர் தொழிற்துறையில் ஈடுபட்டு உள்ள மற்றும் வருடாந்த தொழிற்துறை அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு குறித்துரைக்கப்பட்ட நபர்களின் அறிவு மற்றும் திறமைகளை விருத்தி செய்யும் பணிக்காக தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்தல்.

(ஊ) நில அளவைகள் தொடர்பான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை ஏற்றுக்கொள்ளல்,செயன்முறை அனுபவம் தொடர்பான தேவைப்பாடுகளை குறித்துரைத்தல் மற்றும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களாக பதிவு செய்வதற்கும் மற்றும் வருடாந்த தொழில் சார் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குமான நோக்கங்களுக்காக தகைமை பெறும் பரீட்சைகள் மற்றும் தொழில் சார் நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்.

(எ) நில அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ள நபர்களின் கல்வி,பயிற்சி மற்றும் ஏற்றுக்கொள்ளல் ஆகிய விடயங்களில் சம நிலைமை ஒன்றினையும் மற்றும் பரஸ்பர தன்மையினையும் ஸ்தாபிப்பதற்காக வெளிநாடுகளில் உள்ள அதிகாரிகளுடன் பரஸ்பர வேலைத் திட்டங்களுக்கான இணக்கப்பாட்டினை ஏற்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

(ஏ) குறித்துரைக்கப்பட்ட கல்வித் தரங்களைப் பேணி வருவதற்காக இலங்கையின் நில அளவை நடவடிக்கைகள் மற்றும் காணித் தகவல்கள் சார் கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் என்பன தொடர்பாக ஈடுபட்டு உள்ள நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.

(ஐ) இலங்கையின் ஏனைய உரிய தொழில்சார் நிறுவனங்களுடன் இணைந்து உயர் தரத்திலான தொழில் சார் தரங்களைப் பேணி வருதல்.

05. நில அளவைகள் சபைக்கு உரித்தான அதிகாரங்கள்

05.1 நில அளவைகள் சபையிடம் ஒப்படைக்கப்படும் அதிகாரங்கள் நில அளவைகள் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் கீழ் கீழே உள்ளவாறு குறிப்பிடப்பட்டு உள்ளது.

(அ) ஏதேனும் அசையும் அல்லது அசையாத சொத்துக்களை சுவீகரித்துக்கொள்ளல்,ஏற்றல், வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடல், ஈடு வைத்தல்,பிணையமாக வைத்தல்,விற்றல் அல்லது வேறு ஏதாவது ஒரு வகையில் கையுதிர்த்தல்.

(ஆ) பணமாக அல்லது வேறு வகையில் பரிசுகள்,கொடைகள் அல்லது நன்கொடைகளைப் பொறுப்பேற்றல் மற்றும் சுய பணிகளை நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பயன்படுத்தல்.

(இ) சபையின் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதற்குத் தேவையான உத்தியோகத்தர்களையும் மற்றும் ஊழியர்களையும் நியமித்தல்.

(ஈ) அவ்வாறு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் செலுத்த வேண்டிய உழைப்பிற்குரிய ஊதியத்தைத் தீர்மானித்தல்.

(உ) சுய பணிகளை விளைதிறன் மிக்க வகையில் நிறைவேற்றுவதற்காக குழுக்களை நியமித்தல்.

(ஊ) சுய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக சமூக பாதுகாப்பு முன்மொழிவுத் திட்டம் ஒன்றினைத் தாபித்தல் மற்றும் நலன்புரி மற்றும் விளையாட்டுத்துறை வசதிகளை வழங்குதல்.

(எ) சபையின் நடவடிக்கைகளுக்குரிய நிருவாகம் தொடர்பாக விதிகளை ஆக்குதல் மற்றும்

(ஏ) பொதுவாக சபைக்குரிய பணிகளை உரிய வகையில் நிறைவேற்றுவதனை இலகுபடுத்துவதற்காக தேவைப்படும் ஏனைய சகலவற்றையும் மேற்கொள்ளல்.

05.2 நில அளவைகள் சட்டத்தின் 47 ஆம் பிரிவிற்கு அமைய நில அளவைகள் சபைக்கு உரித்தான ஒழுக்காற்று அதிகாரங்கள் கீழ்வருமாறு அமையும்.

(1) இந்தப் பகுதிக்கு ஒத்தியங்கும் வகையில் விசாரணை ஒன்றினை நடாத்தியதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட நிள அளவையாளர் ஒருவர் தொழில்சார் முறைகேடு ஒன்று தொடர்பில் குற்றவாளி என சபை திருப்தியுரும் சந்தர்ப்பம் ஒன்றில் சபையினால் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள நியதிகளில் ஒன்றினையோ அல்லது அதிலும் அதிக எண்ணிக்கையான ஒன்றினையோ மேற்கொள்ள முடியும். :-

(அ) பதிவு செய்யப்பட்ட நில அளவையாளரின் பதிவினை இரத்துச் செய்து குறித்த நில அளவையாளரின் பெயரினை, பெயர்ப் பட்டியலில் இருந்து நீக்கும்படியான கட்டளை ஒன்றினை விதித்தல்:

(ஆ) பதிவு செய்யப்பட்ட நில அளவையாளரின் பதிவினை மூன்று வருடங்களை மிகைக்காத காலப்பகுதி ஒன்றிற்கு இடைநிறுத்துமாறு கட்டளை ஒன்றினை விதித்தல்:

(இ) பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துமாறு கட்டளை ஒன்றினை விதித்தல்:

(ஈ) சபையினால் விதிக்கப்படக் கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையில் மூன்று வருடங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கு நில அளவைகள் தொழிற்துறையில் ஈடுபடுவதற்கு பதிவு செய்யப்பட்ட நில அளவையாளருக்கு முடியும் என்ற கட்டளை ஒன்றினை விதித்தல்:

(உ) கட்டணங்கள் தொடர்பாகவோ அல்லது சபையினால் பொருத்தமானது எனக் கருதும் வேறு ஒரு வகையிலான, வேறு ஏதேனும் பொருத்தமான கட்டளை ஒன்றினையோ விதித்தல்.

(2) இந்தப் பிரிவின் கீழான பதிவினை இடைநிறுத்தும் கட்டளை ஒன்று அமுலில் இருக்கும் போது குறித்த நபர் இந்தச் சட்டத்தின் பணிகளுக்காக பதிவு செய்யப்படாத ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும். எனினும் குறித்த கட்டளை பூர்த்தியடைந்தவுடன் உடனடியாக அவ்வாறு பூர்த்தியடைந்த தினம் தொடக்கம் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர் ஒருவராக அவரின் உரிமைகளையும் மற்றும் சிறப்புரிமைகளையும் மீளப் பெற்றுத்தருதல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டிய சகல கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் என்பன சபைக்கு அறிவிடப்பட வேண்டிய கடன் ஒன்றாக சபையினால் அறவிடப்படுதல் வேண்டும்.

06. 2022 ஆம் ஆண்டிற்கான நில அளவைகள் சபையின் செயலாற்றுகை அறிக்கைகள்

06.1 2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 ஆம் திகதி வரையான மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் நில அளவைகள் சபையின் கூட்டிணைவு மற்றும் மேற்படி உறுப்பினர்களின் நியமனத் திகதிகள் என்பன கீழ்வருமாறு அமையும்.

I.	தலைவர் / திரு.ஏ.திசாநாயக்க	- 2021.11.18 தொடக்கம்
II.	உப தலைவர் / திரு.ஆர்.பலிஹக்கார	- 2021.11.18 தொடக்கம்
III.	உறுப்பினர் / திரு.கே.கே.எஸ். ரத்னாயக்க	- 2021.10.14 தொடக்கம்
IV.	உறுப்பினர் / பேராசிரியர் திரு.கே.எம்.சீ.கொன்தசிங்ஹ	- 2021.06.01 தொடக்கம்
V.	உறுப்பினர் / திரு.என்.ஏ. குணவர்தன	- 2021.01.01 தொடக்கம்
VI.	உறுப்பினர் / திரு.கே.ஏ.கே.எல். எதிரிசிங்ஹ	- 2021.01.01 தொடக்கம்
VII.	உறுப்பினர் / திரு.ஜே.எம். விஜேவர்தன	- 2021.01.01 தொடக்கம்

குறிப்பு : நில அளவைகள் சட்டத்தின் பிரகாரம் சபையின் மேற்படி கூட்டிணைவிற்கு மேலதிகமாக நிதி அமைச்சினைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பிரதிநிதி ஒருவர் சபையின் மாதாந்த நிருவாக சபைக் கூட்டங்களில் பங்குபற்றுவார்.

2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 ஆம் திகதி வரையான மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதிக்காக நிதி அமைச்சின் பிரதிநிதியாக திரு. எச்.எம்.சாலிய தர்மவர்தன அவர்கள் சபையின் மாதாந்த நிருவாக சபைக் கூட்டங்களில் பங்குபற்றி உள்ளார்.

06.2 2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 ஆம் திகதி வரையான மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் மாதாந்த சபைக் கூட்டங்கள் 09 உம், பொதுமக்கள் முறைப்பாடுகளுக்கான புலனாய்வுக் கூட்டங்கள் 07 உம் மற்றும் 07 உப குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டு உள்ளன.

மேற்படி கூட்டங்களுக்கு உறுப்பினர்களின் பங்குபற்றல்கள் கீழ்வருமாறு அமையும்.

தொடரிக்கம்	பெயர்	பதவி	மாதாந்தக் கூட்டங்கள்	புலனாய்வுக் கூட்டங்கள்	உப குழுக் கூட்டங்கள்
1	ஏ.திசாநாயக்க	தலைவர்	9	6	1
2	ஆர். பலிஹக்கார	உப தலைவர்	8	3	5
3	கே.கே.எஸ்.ரத்னாயக்க	உறுப்பினர்	9	7	4
4	பேராசிரியர் / கே.எம்.சீ. கொன்தசிங்ஹ	உறுப்பினர்	7	-	-
5	கே.ஏ.கே.எல். எதிரிசிங்ஹ	உறுப்பினர்	7	7	6
6	ஜே.எம்.விஜேவர்தன	உறுப்பினர்	8	7	6
7	என்.ஏ. குணவர்தன	உறுப்பினர்	7	7	7
8	எச்.எம்.எஸ்.தர்மவர்தன	நிதி அமைச்சின் பிரதிநிதி	9	-	1

07. நில அளவைகள் சபையின் அலுவலர் குழாம்

நில அளவைகள் சட்டத்தின் 55 ஆவது பிரிவின் ஊடாக சபையின் பணிகளை வினைத்திறனுடன் நிறைவேற்றிக்கொள்வதற்காக அவசியம் என சபை கருதும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்துக் கொள்வதற்கு நில அளவைகள் சபையிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அதற்கு அமைய, 2022.01.10 ஆம் திகதி முதல் 2022.12.31 ஆம் திகதி வரையான மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதிக்கான நில அளவைகள் சபையின் அலுவலர் குழாம் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது.

தொடரி லக்கம்	பெயர்	பதவி	நியமனத் திகதி
1	திரு.எம்.என்.அமரசிங்ஹ	செயலாளர் / பதிற் கடமை	2021.12.01
2	திருமதி.கே.எல்.ஏ.என்.சந்தமாலி	கணக்காளர் / பகுதி நேர	2021.10.05
3	திருமதி. டபிள்யு.ஏ.எஸ். பிரியதர்ஷனி	கணினி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் / எழுதுவினைஞர்	2004.05.24
4	திருமதி. எச்.கே.குலதுங்க	கணினி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் / எழுதுவினைஞர் (ஒப்பந்த அடிப்படை)	2022.07.11
5	திருமதி.எம்.டீ.எச். ஹங்ஸனீ	கணினி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் / எழுதுவினைஞர் (ஒப்பந்த அடிப்படை)	2022.09.01
6	திருமதி.ஏ.எச்.தஹநாயக்க	கணினி நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் / எழுதுவினைஞர் (ஒப்பந்த அடிப்படை)	2022.10.25
7	திரு.ரீ.ஜீ.பிரணாந்து	அலுவலகப் பணியாளர்	2004.07.15

08. செயற்பாடுகள்


08.1. பதிவு செய்தல்

2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 ஆம் திகதி வரையான மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதிக்காக நில அளவைகள் சட்டத்தின் 39 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக் கூடிய அட்டவணைக்கு அமைய கல்வித் தகைமைகள் மற்றும் உரிய செயன்முறை அனுபவம் என்பவற்றினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் 106 பேர் (2021 ஆம் ஆண்டில் முன்கொண்டு வரப்பட்ட 21 விண்ணப்பங்களுடன்) நில அளவைகள் சபையின் பதிவிற்காக விண்ணப்பங்களை அனுப்பி உள்ளனர்.

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களாக நில அளவைகள் சபையில் பதிவு செய்வதற்காக தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் உரிய செயன்முறை அனுபவம், ஆற்றல், தேர்ச்சி மற்றும் உடற்றகைமை என்பவற்றைப் பரீட்சித்துப் பார்த்ததன் பின்னர் அதில் 72 விண்ணப்பதாரிகளுக்கு மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக நில அளவைகள் சபையின் பதிவு வழங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் நில அளவைகள் சபையில் பதிவு வழங்கப்பட்ட எண்ணிக்கை 34 ஆகும். இதனை மேற்படி வருடத்துடன் ஒப்பிடும் போது இரண்டு மடங்கு அதிகமாகும்.

அவ்வாறே கல்வித் தகைமைகள் மற்றும் உரிய செயன்முறை அனுபவம் மற்றும் அல்லது உரிய வகையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத காரணத்தினால் 23 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. அவ்வாறே மேலும் 11 விண்ணப்பங்கள் 2023 ஆம் ஆண்டில் கவனம் செலுத்துவதற்காக அனுப்பப்பட்டு உள்ளன. அதற்கு அமைய 2022 டிசம்பர் 31 ஆந்திகதியன்று சபையில் பதிவினைப் பெற்றுக்கொண்ட மொத்த நில அளவையாளர்களின் எண்ணிக்கை 2442 ஆகும்.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், நில அளவைகள் சபையினால் கல்வித் தகைமைகள் மற்றும் உரிய செயன்முறை அனுபவம் என்பவற்றினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு நில அளவைகள் சபையின் பதிவினை வழங்குதல் தொடர்பான புள்ளிவிபரவியல் ரீதியான தகவல்களின் வரைபு ரீதியான படம் கீழே காட்டப்பட்டு உள்ளது.




08.2 தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரங்கள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக, நில அளவைகள் சார் தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரல் 2021 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு அமைய 2022 ஆம் ஆண்டிற்காக வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 924 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று இருந்ததுடன் பல்வேறு குறைபாடுகள் காரணமாக அவற்றுள் 13 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. அதற்கு அமைய 2022 ஆம் ஆண்டிற்காக 911 வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு உள்ளன.

நில அளவைகள் சபையினால் 2021 ஆம் ஆண்டிற்காக 1,331 வருடாந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனை இந்த வருடத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 420 அனுமதிப்பத்திரங்கள் என்ற அளவில் பாரிய வீழ்ச்சி ஒன்றாகும். 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த வீழ்ச்சி சதவீதத்தில் 31.5% ஆகும்.

இதற்கு பிரதான காரணமாக அமைந்தது 2021 ஆம் ஆண்டிற்காக பிரத்தியேகமாக நில அளவைத் தொழிற்துறையில் ஈடுபடுவதற்கு அரச நில அளவையாளர்களுக்கு வழங்கப்பட்டு இருந்த அனுமதியினை நீதிமன்றக் கட்டளை ஒன்றின் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டமை ஆகும்.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில், நில அளவைகள் சபையினால் நில அளவையாளர்களுக்கு வழங்கப்பட்ட வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான புள்ளிவிபரவியல் தகவல்களின் வரைபு ரீதியான படம் கீழே காட்டப்பட்டு உள்ளது.



2022 சனவரி 1 ஆந்திகதி தொடக்கம் 2022 டிசம்பர் 31 ஆந்திகதி வரையான மீளாய்வு ஆண்டிற்காக வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் முதலெழுத்துக்களுடன் பெயர்,பதிவு இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய தகவல்களை 2022 ஏப்பிறல் மாதம் 01 ஆந்திகதிய மற்றும் 2,274 ஆம் இலக்க மற்றும் 2022 நவெம்பர் மாதம் 04 ஆம் திகதிய மற்றும் 3,305 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகைகளில் பிரசுரித்து வெளியிடப்பட்டு உள்ளது.

அதற்கு மேலதிகமாக, வருடாந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் பதிவு இலக்கம், முதலெழுத்துக்களுடன் பெயர்,முழுப் பெயர்,தேசிய அடையாள அட்டை இலக்கம், வதிவிட மாவட்டம், முகவரி, தொலைபேசி இலக்கம், தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திர இலக்கம் மற்றும் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலப்பகுதி ஆகிய தகவல்கள் இணையத்தளத்தில் (www.landsurveycouncil.org) உள்ளடக்கப்பட்டு உள்ளன. மேலும் மேற்படி விபரங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இற்றைப்படுத்தி பேணப்பட்டு வரப்படும்.

08.3 பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்.

நில அளவைகள் சபையினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக பொது மக்கள் தற்போது போதியளவிலான அறிவினைப் பெற்றுக்கொண்டு உள்ளமையினால். நூற்றுக்கணக்கான வருடங்கள் பழைமையான திட்ட வரைபடங்கள் தொடர்பாகவாயினும், அதனோடு தொடர்புடைய வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரதாரராகிய நில அளவையாளர்களின் வாழ்க்கைத் தரவுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அடிக்கடி நில அளவைகள் சபைக்கு வருகை தரும் ஆட்கள் அதிகரித்து உள்ளனர். மேற்படி தகவல்களை சரியாகவும் மற்றும் விரைவாகவும் வழங்குவதற்காக வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரதாரராகிய சகல நில அளவையாளர்களினதும் பிரத்தியேக முகவரி,பதிவு இலக்கம்,தொலைபேசி இலக்கம், வருடாந்த அனுமதிப்பத்திர இலக்கம் ஆகிய தகவல்களை உள்ளடக்கிய கணினி மயப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பு ஒன்று நில அளவைகள் சபையினால் தயாரிக்கப்பட்டு பேணி வருவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இயன்றளவு மேற்படி தரவுக் கட்டமைப்பிற்குள் அவர்களின் தொலைபேசி இலக்கமும் உள்ளடக்கப்பட்டு உள்ளதனால் தேவையான திட்ட வரைபடங்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தொலைபேசி மூலம் அவர்களைத் தொடர்பு கொள்வதற்கான வசதிகள் பொதுமக்களுக்குக் கிடைத்து உள்ளது.

அவ்வாறாயினும், இது வரை எம்மால் வழங்கப்படும் மேற்படி சேவையின் ஊடாக பொதுமக்களுக்குத் தேவையான அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களினால் தயாரிக்கப்பட்ட பழைய திட்ட வரைபடங்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது பெற்றுக் கொள்ளப்பட்ட பிரதிகள் ஒழுங்குமுறையில் இல்லாமை தொடர்பில் நில அளவைகள் சபை திருப்தி அடையவில்லை. பதிவு செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களினால் தயாரிக்கப்படும் திட்ட வரைபடங்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அல்லது அதற்குரிய ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் நிலவும் பிரச்சினை பொதுமக்கள் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினை ஒன்றாக அடையாளம் காணப்பட்டு உள்ளதுடன் அது தொடர்பாக நடைமுறைப்படுத்தக் கூடிய வழிமுறை ஒன்றினை திட்டமிடுவதற்கு சபை கவனம் செலுத்தி உள்ளது.

எவ்வாறெனினும் மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைய 94 சந்தர்ப்பங்களில் மேற்படி தகவல்கள் வழங்கப்பட்டு உள்ளன.

08.4 நில அளவைகள் சபைக்குக் கிடைக்கப்பெற்ற பொதுமக்களின் முறைப்பாடுகள்

பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களினால் மேற்கொள்ளப்படும் நில அளவை நடவடிக்கைகள் மற்றும் தயாரிக்கப்படும் திட்ட வரைபடங்கள் தொடர்பில் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல் நில அளவைகள் சபைக்கு உரித்தான இன்னுமோர் பிரதான பணியாகும். வெறுமனே, மேற்படி முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படுவது நில அளவைகள் சட்டத்தின் 46 ஆவது பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் கீழ் ஆகும். முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை (கிடைக்கப் பெற்று உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கைக்கு அமைய) நில அளவைகள் சபை கூட்டப்படுவதுடன் ஒரு கூட்டத்தொடரில் கிட்டத்தட்ட 6 அல்லது 7 முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனூடாக, பதிவு செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களினால் மேற்கொள்ளப்படும் நில அளவைகள் மற்றும் அல்லது அவர்களினால் தயாரிக்கப்படும் திட்ட வரைபடங்கள் தொடர்பாக நிலவும் பிரச்சினைகளை பெருமளவில் தீர்த்துக் கொள்வதற்கு இயலுமாவதுடன் நில அளவையாளர்களின் தொழில் சார் ஒழுக்கம் மற்றும் தொழில்சார் விழுமியங்கள் என்பவற்றினை விருத்தி செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் ஒன்றும் இதனால் கிடைக்கின்றது.

எவ்வாறாயினும், சில முறைப்பாடுகளின் தன்மைக்கு ஏற்ப, அதாவது, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அமைய, குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கான போதியளவான சாட்சிகள் இல்லாத, நீதிமன்றத் தீர்ப்பிற்கு ஏற்ப நீதிமன்ற ஆணையாளர்களாக மேற்கொள்ளப்பட்ட நில அளவைகள் மற்றும் நில அளவைகள் சபையின் அதிகாரங்களின் கீழ் செயற்பட முடியாத, மேற்படி வகையான முறைப்பாடுகள் தொடர்பாக நில அளவைகள் சபை தீர்மானங்களை வழங்காது என்பதுடன், மேற்படி சந்தர்ப்பங்களில் உரிய முறைப்பாட்டாளர்களுக்கு மேற்படி பிரச்சினைகளை நீதிமன்ற நடவடிக்கைகளின் மூலம் தீர்த்துக்கொள்வதற்கு அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் வேறு பொருத்தமான மாற்றுவழிகளை மேற்கொள்வதற்கு அவசியமான ஆலோசனைகள் வழங்கப்படும்.


2022 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் கிடைக்கப் பெற்று எனினும் மேற்படி வருடங்களில் விசாரணைகள் செய்து பூர்த்தி செய்ய முடியாமல் போன முறைப்பாடுகள் மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கிடைக்கப்பெற்ற மற்றும் குறித்த ஆண்டில் விசாரணை செய்து பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான புள்ளிவிபரவியல் தரவுகள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளன.

2021 டிசம்பர் மாதம் 31 ஆந்திகதியன்று விசாரணைகள் பூர்த்தியடையாது எஞ்சியிருந்த எண்ணிக்கை = 104
2022 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை = 72
2022 ஆம் ஆண்டிற்குள் குறைபாடுகள் காரணமாக நிராகரிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை = 01
2022 ஆம் ஆண்டில் விசாரணைகள் செய்து பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை = 41

2018 டிசம்பர் 31 ஆந்திகதியன்று விசாரணைகள் பூர்த்தியடையாது எஞ்சியிருந்த எண்ணிக்கை = 134

2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 63 ஆவதுடன் அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2022 ஆம் ஆண்டில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் சதவீதம் 14% இனால் அதிகரித்து உள்ளதாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, முறைப்பாடுகளின் விசாரணைகளைப் பூர்த்தி செய்தல் 2021 ஆம் ஆண்டில் 39 ஆகக் காணப்பட்டதுடன் அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2022 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் சதவீதம் கிட்டத்தட்ட 5% இனால் சொற்ப அளவில் அதிகரித்து உள்ளமை தென்படுகின்றது.

மேற்படி தரவுகள் கீழே காட்டப்பட்டு உள்ள 2 ஆவது படத்தின் மூலம் வரைபு ரீதியாகக் காட்டப்பட்டு உள்ளது.



08.5 பதிவு செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களின் தொழில்சார் மற்றும் ஏனைய முறைகேடான செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது முறைகேடான நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளதாக சபை தீர்மானித்து உள்ள போது அவ்வாறான நில அளவையாளர்களுக்கு எதிராக 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் 47 ஆவது பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் புலனாய்வு ஒன்றின் பின்னர் தண்டனைகள் வழங்கப்பட முடியும்.

2022 ஆம் ஆண்டில் நில அளவைகள் சபையினால் மேற்படி 08.4 ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டு உள்ள வகையில், கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கான விசாரணைகள் நடாத்தப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய குற்றம் சாட்டப்பட்ட நில அளவையாளர்களுக்கு விசாரணைக் கட்டணங்களை அறவிடுதல்கள் மற்றும் அறிவுருத்தல்கள் ஏராளமான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

மேலும் மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஒரேயொரு குற்றம் சாட்டப்பட்ட பதிவு செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஒருவருக்கு கீழே குறிப்பிடப்பட்டு உள்ள வகையில் அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்துதல் மற்றும் பதிவினை இரத்து செய்தல் ஆகிய இரு தண்டனைகளையும் விதிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

முறைப்பாட்டு இலக்கம்	பதிவு இலக்கம்	நில அளவையாளரின் பெயர்	விசாரணையின் தீர்மானம்
நிஅச/5/1217	19891607	கந்தையா கமலநாதன்	2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துதல் மற்றும் ரூ. . 10,000.00 தொகை விசாரணைக் கட்டணம் ஒன்றிற்கு கட்டுப்படுத்துதல்
நிஅச/5/1158 நிஅச/5/1159 நிஅச/5/1160	19891607	கந்தையா கமலநாதன்	2023.01.01 தொடக்கம் 2025.12.31 வரையான 3 வருட காலம் ஒன்றிற்கு பதிவினை இடைநிறுத்துதல்

09. கல்வி மற்றும் பயிற்சி வேலைத் திட்டங்கள்

09.1 முதற் தடவையாக தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் நில அளவையாளர்களுக்கான செயலமர்வுகள்

நில அளவைகள் சபையினால் நில அளவைத் தொழிற்துறையில் ஈடுபடுவதற்காக பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு வழங்கப்படும் வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பயன்படுத்தி அவர்கள் தொழில் தகைமை கொண்ட நில அளவையாளர்களாக நில அளவைகள் தொழிற்துறைக்குள் பிரவேசிக்கும் ஆரம்ப கட்டத்திலேயே அதற்கான வழிகாட்டல் பாடநெறிகளை நடாத்துவதும் நில அளவைகள் சபையினால் மேற்கொள்ளப்படும். மேற்படி பாடநெறிகளின் போது வளவாளர் பங்களிப்பிற்காக விரிவான கல்வி சார் அறிவு மற்றும் விஷேடமாக நில அளவைகள் தொழிற்துறையில் சிறந்த அனுபவம் என்பவற்றினைக் கொண்ட சிரேஷ்ட பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களை ஈடுபடுத்தி மேற்படி புதிய நில அளவையாளர்களுக்கு தேவையான அறிவு, விளக்கம் மற்றும் வழிகாட்டல் என்பன வழங்கப்படும்.

நில அளவைகள் தொழிற் துறையாளர் ஒருவராக முதற் தடவையாக மேற்படி தொழிற்துறையில் பிரவேசிக்கும் போது, எந்தவொரு சிரமமும் அல்லது பிரச்சினைக்குரிய நிலைமையும் இன்றி ஆரம்பம் முதலே பொதுமக்களுக்கு தரமான மற்றும் உயர் மட்ட சேவை ஒன்றினை வழங்குவதற்கு பதிவு செய்யப்பட்ட நில அளவையாளரை தயார்படுத்தல் மேற்படி வழிகாட்டல் பாடநெறியினை நடாத்துவதன் பிரதான நோக்கமாகும்.
எவ்வாறெனினும் 2022 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் உட்பட ஏனைய குழப்பகரமான நிலைமையின் முன்னிலையில் முதற் தடவையாக வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக வழிகாட்டல் பாடநெறி ஒன்றினை நடாத்துவதற்கு இயலாமல் சென்றது.

09.2 தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திப் (CDP) பாடநெறிகள்

விஷேடமாக காணிகளை அளத்தல் தொடர்பான பாடங்களை எடுத்துக் கொண்டால் தொடர்ச்சியான தொழிற்துறை அபிவிருத்தி அத்தியவசியமான ஒரு விடயமாகும். தற்கால சமூக, பொருளாதார அவ்வாறே சட்டரீதியான வகையில் அவ்வாறே மற்றும் தொழிநுட்ப ரீதியில் நடைபெறும் மாற்றங்களுக்கு ஒத்தியங்கும் வகையில் உயர் மட்ட மற்றும் தரமான திட்ட வரைபடங்கள் மற்றும் வரைபடங்களைத் தயாரிப்பதற்காக நில அளவைத் தொழிற்துறையினருக்கு இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் கிடைக்கும் அறிவு மற்றும் வழிகாட்டல்கள் என்பன மிகவும் உறுதுணையாக அமையும்.

நில அளவைகள் சார் தொழிற்துறையில் ஈடுபட்டு உள்ள மற்றும் நில அளவைகள் சபையின் வருடாந்த அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் தொழிற்துறையினரின் அறிவு மற்றும் திறமை என்பவற்றினை விருத்தி செய்வதற்காக தொழில் சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் நில அளவைகள் சபைக்கு உரித்தான பணி ஒன்றாக நில அளவைகள் சட்டத்தின் 37 ஆவது பிரிவின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. ஆதலால் சகல அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களையும் நில அளவைத் தொழிற்துறை தொடர்பான நவீன தொழிநுட்பம் மற்றும் வழிமுறைகள் என்பன தொடர்பான பயிற்சிப் பாடநெறிகள் / செயலமர்வுகள் என்பவற்றில் பங்குபற்றச் செய்வதற்காக ஆர்வமூட்டல் நில அளவைகள் சபையினால் நிதமும் மேற்கொள்ளப்படுகின்றது.

இங்கு, பிரத்தியேகமாக நில அளவைத் தொழிற்துறையில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கும் பயிலுநர் நில அளவைத் தொழிற்துறையினரை (முதற் தடவையாக வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் நில அளவையாளர்களுக்கான) நெறிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் அவ்வாறே அனுபவம் மிக்க நில அளவையாளர்களுக்காக விருத்தியடைந்த தொழிநுட்ப முறைகளுக்கு உரிய நிகழ்ச்சித்திட்டங்களும் வெவ்வேறாக நடாத்தப்படும். மேலும், நில அளவைகள் சபைக்கு மேலதிகமாக, அதன் கண்காணிப்பின் கீழ் இலங்கை நில அளவையாளர்கள் நிறுவனம் மற்றும் அதிகாரம் பெற்ற மாவட்ட நில அளவையாளர்களின் சங்கம் போன்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் ஊடாகவும் மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

விஷேடமாக வெளிவாரியான நிறுவனங்கள் மற்றும் அல்லது அமைப்புக்களினால் தொடர்ச்சியான தொழில் சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்யும் போது, அதற்காக பங்குபற்றச் செய்யப்படும் வளவாளர்களின் கல்வி மற்றும் நிபுணத்துவ அறிவு அவ்வாறே அவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் துறையில் வெளிக்காட்டி உள்ள தேர்ச்சி என்பன தொடர்பில் நில அளவைகள் சபை விஷேட கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அவ்வாறே மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக நில அளவைகள் சபைக்கு மேலதிகமாக இலங்கை நில அளவையாளர் நிறுவனம் மற்றும் கம்பஹா,குருணாகல் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் சங்கங்களின் ஊடாக பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் ஆகியோருக்கான தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திப் பாடநெறிகளை நடாத்துவதற்காக வெளிக்காட்டப்பட்டு உள்ள ஆர்வம் தொடர்பாக நில அளவைகள் சபை மிகவும் மகிழ்ச்சி அடைவதுடன் மேற்படி பாடநெறிகள் நில அளவைகள் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டும் உள்ளன.

2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டு உள்ள தொடர்ச்சியான தொழில் சார் அபிவிருத்திப் பாடநெறிகள் தொடர்பான சாராம்சம் ஒன்று கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது.

	நிறுவனம்	தொழில்சார் அபிவிருத்திப் பாடநெறி	நடாத்தப்பட்ட திகதி
1	கம்பஹா மாவட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் சங்கம்	துண்டாடப்பட்ட வரைபடங்களில் பின்வந்த காலப்பகுதிக்கு உரிய நில அளவைகள் மற்றும் காணி விபரப் பட்டியல்களின் தரவுத் தொகுதிகள்	2022.01.29
2	குருணாகல் மாவட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் சங்கம்	தொழில் சார் ஒழுக்க நெறிமுறைகள்	2022.02.25
3	யாழ்ப்பாண மாவட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் சங்கம்	நிருவாகத்திற்கான நவீன நில அளவைத் தொழிநுட்பத்தின் பாவனை	2022.08.20
4	நில அளவைகள் சபை	கூட்டுத் தலைமைக் கோட்பாடுகள் மற்றும் கூட்டுத் தலைமைத் திட்ட வரைபடங்கள்	2022.08.24
5	நில அளவைகள் சபை	கூட்டுத் தலைமைக் கோட்பாடுகள் மற்றும் கூட்டுத் தலைமைத் திட்ட வரைபடங்கள்	2022.09.15
6	நில அளவைகள் சபை	GNSS தொழிநுட்பம் மற்றும் CORS Network	2022.10.14
7	நில அளவைகள் சபை	GNSS தொழிநுட்பம் மற்றும் CORS Network	2022.12.02
8	நில அளவைகள் சபை	தொழில் சார் ஒழுக்க நெறிமுறைகள்	2022.12.08
9	இலங்கை நில அளவையாளர்கள் நிறுவனம்	காணி முகாமைத்துவம் மற்றும் நில அளவைகள் சட்டம்	2022.12.13


10. நிதி முகாமைத்துவம்

10.1 வருமானங்கள் மற்றும் செலவு

2021 ஆம் ஆண்டில் நில அளவைகள் சபையினால் ஈட்பட்ட வருமானம் ரூ. 6,498,077.00 ஆவதுடன் 2022 ஆம் ஆண்டில் வருமானம் ரூ. 7,560,385 ஆகும். அதற்கு அமைய 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த வருடத்தில் சபையினால் ஈட்டுக்கொள்ளப்பட்ட வருமானம் முன்னைய வருடத்திலும் பார்க்க ரூ. 1,062,308.00 தொகையினால் அதிகரித்து உள்ளது.
2022 ஆம் ஆண்டிற்காக சபையினால் ஏற்கப்பட்ட செலவு ரூ. 7,111,198.00 ஆகும் என்பதுடன் 2021 ஆம் ஆண்டில் சபையின் செலவு ரூ. 5,539,162.00 தொகை ஆகும்.

அதற்கு அமைய 2022 ஆம் ஆண்டில் சபை ரூ. 449,187.00 தொகை தேறிய இலாபம் ஒன்றினை ஈட்டிக் கொண்டு உள்ளது.

2022 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் சபையின் வருமானத்தின் மற்றும் செலவின் வரைபு ரீதியான படம் கீழே காட்டப்பட்டு உள்ளது.



10.2 சபையின் நிதியம்

நில அளவைகள் சட்டத்தின் 56 (2) ஆவது பிரிவின் கீழ் நில அளவைகள் சபையின் நிதியம் சேகரிக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக விபரிக்கப்பட்டு உள்ளது. அதற்கு அமைய, மொத்த நிதியத்திலிருந்து கிடைக்கக் கூடிய தொகையும், நில அளவைகள் சட்டத்தின் கீழ் சபைக்கு வழங்கப்பட்டு உள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் மற்றும் நிறைவேற்றுவதன் மூலமும் சபைக்குக் கிடைக்கும் பணமும் சபையில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். அதற்கு மேலதிகமாக பரிசுகள்,கொடைகள் மற்றும் நன்கொடைகள் என்ற வகையில் சபைக்குக் கிடைக்கும் பணமும் சபையின் நிதியத்திற்கு சேரும். சபையின் பணிகளையும் மற்றும் அதிகாரங்களையும் நடைமுறைப்படுத்தும் போது செலவிடப்படும் தொகையினை நில அளவைகள் சட்டத்தின் 56 (3) ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்படி நிதியத்தில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

2022 ஆம் ஆண்டிற்காகவும் முன்னைய வருடங்களைப் போலவே அரசின் இணைந்த நிதியத்தில் இருந்து எந்தவொரு ஒதுக்கீட்டுத் தொகையும் பொதுத் திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெறவில்லை. ஆதலால் நில அளவைகள் சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்தும் போதும் மற்றும் நிறைவேற்றும் போதும் அதற்கு உரிய சகல நிறுவன ரீதியான மற்றும் நிருவாக செலவுகள் ஏற்கப்பட்டது அதன் ஊடாக சேகரிக்கப்பட்ட நிதியத்தின் மூலமாகும். அவ்வாறு சேகரிக்கப்படும் சகல நிதிகளும் நில அளவைகள் சபையினால் முகாமைத்துவம் செய்யப்படும்.

நில அளவைகள் சபை நிதியத்தின் பிரதான தோற்றுவாயாக உள்ளது நில அளவையாளர் தொழிற்துறையினருக்கு வருடாந்தம் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதனால் கிடைக்கும் வருமானம் ஆகும். அதற்கு மேலதிகமாக, கல்வி சார் தகைமைகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்காக சபையில் பதிவினை வழங்குதல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றினை நடாத்துவதன் மூலமும், பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதன் மூலமும், பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்று விசாரணைகளை நடாத்துவதன் மூலமும் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் விசாரணைக் கட்டணங்களாக குற்றம் சாட்டப்பட்ட நில அளவையாளர்களிடம் இருந்து அறவிடப்படும் விசாரணைக் கட்டணங்கள் ஆகியவற்றின் மூலமும் நில அளவைகள் சபைக்கு நிதியம் சேகரிக்கப்படும்.

2022 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று நில அளவைகள் சபையின் நிலையான வைப்புக்கள் கணக்கில் காணப்பட்ட நிதியத்தின் மீதி, ரூ. 17,940,464.00 ஆகக் காணப்பட்டது.

10.3 சபையின் நிதிக் கணக்காய்வு நடவடிக்கைகள்

10.3.1 உள்ளகக் கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்கள்

நில அளவைகள் சபையினால் மேற்கொள்ளப்படும் நிதி நடவடிக்கைகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் வருடாந்தக் கணக்காய்விற்கு உட்படுத்தப்படும். கணக்காய்வு முகாமைத்துவக் குழு ஒன்றும் நில அளவைகள் சபையினால் நியமிக்கப்பட்டு உள்ளதுடன் அதன் கூட்டிணைவு கீழே குறிப்பிடப்பட்டு உள்ள உறுப்பினர்களையும் மற்றும் சபையின் உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி இருக்கும்.

i). நிதி அமைச்சின் பிரதிநிதி ஒருவர் (தலைவர்)

ii). நில அளவைகள் சபையின் உறுப்பினர்கள் இருவர் (உறுப்பினர்கள்)

iii). கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர் (கண்காணிப்பாளர்)

iv). காணி அமைச்சின் பிரதிநிதி ஒருவர் (உறுப்பினர்)

v). நில அளவைகள் சபையின் கணக்காளர்

vi). நில அளவைகள் சபையின் செயலாளர்

பொதுவாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மேற்படி குழு ஒன்றுகூடுவதுடன் அதன்போது, சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக பகுப்பாய்வு ரீதியாக கேட்டறியப்பட்டதன் பின்னர் மேற்படி குழுவின் அறிக்கைகள் நில அளவைகள் சபையின் கவனத்திற்கும் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும் அனுப்பப்படும். எவ்வாறெனினும் 2022 ஆம் ஆண்டில் அவ்வப்போது நாட்டில் ஏற்பட்ட குழப்பகரமான நிலைமை காரணமாக மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் 03 உள்ளக கணக்காய்வுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டு உள்ளன.

மேற்படி கூட்டத்திற்காக உறுப்பினர்கள் மற்றும் சபையின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றல்கள் கீழ்வருமாறு அமையும்.

தொடரிலக்கம்	பெயர்	பதவி	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
1	எச்.எம்.எஸ்.தர்மவர்தன	தலைவர்	03
2	என்.ஏ.குணவர்தன	உறுப்பினர்	03
3	கே.கே.எஸ்.ரத்னாயக்க	உறுப்பினர்	01
4	டபிள்யூ.எம்.ரம்யா லாலனி	கண்காணிப்பாளர்	03
5	ஏ.கே.டீ. அனுருத்திகா	உறுப்பினர்	02
6	கே.எல்.ஏ.என்.சந்தமாலி	கணக்காளர் / பகுதி நேர	03
7	எம்.என்.அமரசிறி	செயலாளர் / பதிற் கடமை	03

2022 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை இதில் உள்ளடக்கப்பட்டு உள்ளது.

எச்.எம்.பீ.பி.ஹேரத்	எஸ்.சிவானந்தராஜா
செயலாளர்	தலைவர்
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு	நில அளவைகள் சபை

11. 2022 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குக் கூற்றுக்கள்

காணி அமைச்சு

நில அளவைகள் சபை

2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

நிதி நிலைமை தொடர்பான கூற்று

	குறிப்புக்கள்	2022	2021
சொத்துக்கள்			
அசையாத சொத்துக்கள்			
சொத்துக்கள் பொறிகள் மற்றும் கருவிகள்	1	76,096,858	75,730,165
		76,096,858	75,730,165
அசையும் சொத்துக்கள்			
இறுதி இருப்பு 31.12.2021	2	383,348	313,750
இடர் கடன்கள்	3	186,539	425,717
நிலையான வைப்புக்கள்	4	17,940,464	12,850,945
கிடைக்கப்பெற வேண்டியவைகள்	5	627,169	94,320
காசு மற்றும் காசுக்கு சமனானவைகள்		879,290	4,129,981
		20,016,809	17,814,712
மொத்தச் சொத்துக்கள்		96,113,667	93,544,878
உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்			
மூலதன பங்களிப்பினை வழங்கியது			
பொதுத் திறைசேரி		1,043,030	1,043,030
திரண்ட நிதியம்		84,833,596	83,888,311
மிகை/ (பற்றாக்குறை)		367,510	958,915
		85,201,106	84,847,226
மொத்த உரித்துக்கள்		86,244,136	85,890,256
அசையாத சொத்துக்கள்			
பணிக்கொடைக் கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கீடு	6	752,040	813,471
நடைமுறைப் பொறுப்புக்கள்			
சேரல் செலவுகள்	7	589,329	516,234
முற்பணமாக - நில அளவையாளர் தின சேகரிப்பு		-	855,765
முன்கூட்டியே பெறப்பட்ட வருமானம்	8	8,528,162	5,469,152
		9,117,491	6,841,151
மொத்தப் பொறுப்புக்கள்		9,869,531	7,654,622
மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்		96,113,667	93,544,878

